DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No.65/2025 & Spl.SC.No.66/2025

PROSECUTION WITNESS No - PW- 1

| | | | |
|---|---|---|---|
| Name : | கிளிண்டன் | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of March 2026.

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது காளையார்கோவில் தாலுகா மொங்கன்கண்மாய் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2020ல் சிருகானப்பேரி குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது சிரமம்குரூப் கிராம நிர்வாக அலுவலர் கூடுதல் பொறுப்பை கவனித்து வந்தேன். கடந்த 26.05.2020ல் நானும் கிராம உதவியாளர் பாண்டி என்பவரும் எங்களுக்கு கிடைத்த தகவலின் படி காலை 07.00 மணியளவில் சிரமம் நாட்டார் ஆற்றுக்கால்வாய் பக்கம் சென்றபோது மறவமங்களம் நடுத்தெருவைச் சேர்ந்த ராமநாதன் என்பவர் ஊதா கலர் மாட்டுவண்டியில் 1/4 யூனிட் அளவுள்ள மணலை அள்ளிக்கொண்டிருந்த போது அவரை நேரடியாக பிடித்து வண்டி மற்றும் மணலுடன் காவல் நிலையம் கொண்டு வந்து காளையார்கோவில் காவல் நிலையத்தில் நான் எழுத்து மூலமான புகார் கொடுத்தேன். மேற்படி புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள டயர் சக்கரங்களுடன் கூடிய மாட்டுவண்டி தான் நான் கைப்பற்றியது. மேற்படி டயர் சக்கரங்களுடன் கூடிய மாட்டுவண்டி **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

பணிநகர் பதிவேட்டில் சம்பவ தேதியில் சம்பவ இடத்திற்கு சென்றது குறித்து பதியப்பட்டதா என்றால் பதிவு செய்துள்ளேன். அதை ஆய்வாளரிடம் சமர்பித்தேனா என்றால் இல்லை. திருட்டு தனமாக மணல் அள்ளிய தகவல் குறித்து உயர் அதிகாரிகளிடம் தகவல் அளித்தேனா என்றால் எதிரியை பிடித்ததற்கு பின்னர் தகவல் தெரிவித்தேன். எதிரியை யார் பிடித்தார் என்றால் எதிரியை மாட்டுவண்டியுடன் நான் தான் அழைத்துச் சென்றேன். மணல் அள்ளியதாகச் சொல்லப்படும் வண்டியில் மணல் அள்ளப் பயன்படுத்தப்படும் மண்வெட்டி மற்றும் சட்டி போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டதா என்றால் கைப்பற்றப்படவில்லை. சம்பவ இடத்தில் சர்வே எண் அதன் விஸ்தீரணம் குறித்து புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கில் கைப்பற்றிய மண் மணலா, சவடு மணலா என்பது குறித்து கனிம வள அதிகாரியிடம் சான்று பெற்றேனா என்றால் இல்லை. இவ்வழக்கு சம்பவம் நடந்தற்கு பின் நான் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் சொன்ன விதத்தில் மாட்டு வண்டியில் எதிரி மணல் அள்ளியதை கையும் களவுமாக நான் பிடித்ததாக சொல்வது தவறு என்றும் புள்ளி விவர கணக்கிற்காக காவல் துறையினர் கேட்டுக்கொண்டதிற்கிணங்கள் பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்திலும் சொன்ன தேதியில் அ.சா.ஆ.1 புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை.</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 16:03:43 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை